# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
ෆැක්ස්/தொலைநகல : 011-2868426

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යලය
සරණ මාවත,රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

*web : www.elections.gov.lk    e-mail : info@elections.gov.lk*


| | | |
|---|---|---|
| මගේ අංකය : | ඔබේ අංකය : | දිනය : |
| எனது இல. EC/EDR/PRE/INQ | உமது இல. | திகதி : 2019.09.30 |

1. **அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,**
2. **மாகாண பிரதம செயலாளர்கள்,**
3. **திணைக்களத் தலைவர்கள் / மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்,**
4. **அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் தலைவர்கள்,**
5. **ஆளுநர்களின் செயலாளர்கள்,**

**தற்காலிக, அமைய (நாள் சம்பளம்), பதிலீடு, ஒப்பந்த அல்லது நிவாரண அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல்**

பொது நிருவாகம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2019.09.18 ஆம் திகதிய, 29/2019 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையை அமுல்படுத்தும்போது தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இலக்கம் EC/EDR/PRE-2019 மற்றும் 2019.09.18 ஆம் திகதிய 01 ஆம் இலக்க சுற்றறிக்கை மீதும் தேர்தல் ஆணைக்குழுவினால் 2019.09.19 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2141/52 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பிரசித்தப்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் மீதும் தங்களது உரிய கவனம் ஈர்க்கச்செய்யப்படுகின்றது.

02. தாங்கள் அறிந்த பிரகாரம் சனாதிபதித் தேர்தலை நடாத்துதல் சம்பந்தமான அறிவித்தல் 2018.09.18 ஆம் திகதி வெளியிடப்பட்டமையினால் அரச சேவையில் ஆட்சேர்ப்புக்கள், பதவியுயர்வுகள் மற்றும் இடமாற்றல்கள் தொடர்பான தேர்தல் ஆணைக்குழுவின் விதிமுறைகள் தேர்தல் காலப்பகுதியில் அமுல்படுத்தப்படுகின்றது. இதற்கமைய நியமனங்கள் தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய அலுவல் நடைமுறைகள் மேற்குறிப்பிடப்பட்ட தேர்தல் ஆணைக்குழுவின் 01 ஆம் இலக்க சுற்றறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

03. 29/2019 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையானது, சட்டரீதியாக தேர்தல் காலப்பகுதிக்கு முன்னர் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் வெளியிடப்பட்ட போதிலும் ஆட்சேர்ப்புக்கள் தேர்தல் காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படுவதனால் இது சம்பந்தமாக கீழ் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளை பின்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

i. இதற்காக அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தாலும் அதனை அமுல்படுத்தும் போது எந்தவிதமான அரசியல் அழுத்தங்களோ வேறு வகையான முறைகேடுகளோ நிகழக்கூடாதென்ற பொறுப்பை ஏற்றல்.

ii. ஆட்சேர்த்துக்கொள்ளப்படவுள்ள ஊழியர்களின் பதவிக்குரிய தகைமைகள் உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கின்றது என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

iii. (அ). சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டிய காலப்பகுதியை உரிய முறையில் பூர்த்திசெய்திருப்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளல்.

(ஆ). மேலே (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நியமனக் கடிதங்கள், வருகைப் பதிவேடு மற்றும் சம்பளப் பதிவேடு ஆகியன நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வாளரால் பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன்

தேவையேற்படின் தேர்தல் ஆணைக்குழுவின் தேர்தல் முறைப்பாடுகள் விசாரணைப் பணியகத்தின் அலுவலர்களுக்கும் பரீட்சிப்பதற்கு இடமளித்தல் வேண்டும்.

(இ). அத்துடன் இந்த அனைத்து விடயங்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அவரது பணியாட் தொகுதியை ஈடுபடுத்தி பரீட்சிப்பதற்கு முடியுமாக இருத்தல்.

iv. 29/2019 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையுடன் சம்பந்தப்பட்ட 2014.11.12 ஆம் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி மீது தங்களது விசேட கவனம் ஈர்க்கச்செய்யப்படுகின்றது. 2014.11.12 ஆம் திகதியின் பின்னர் சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள தற்போது 180 நாட்களிலும் அதிகமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும்போது 2014 ஆம் ஆண்டின் பொது நிருவாக சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கிணங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக தாங்கள் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

v. வெற்றிடமின்றி அல்லது புதிய பதவிகளின்றி சேவைக்கு ஆட்சேர்த்துக்கொள்ளுதல் அரசியல் நியமனங்களாகக் கருதப்படுவதனால் அவ்வாறான ஊழியர்களுக்கு நிரந்தரப் பதவிகளை வழங்குதல் சட்டவிரோதமான செயலாக இருக்கலாமென சுட்டிக்காட்டப்படுகின்றது.

vi. நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு முன்னர் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் சம்பந்தமாகவும் நிறுவனத் தலைவர் என்ற வகையில் தாங்கள் திருப்தியடைதல் வேண்டும்.

vii. இது தொடர்பில் எடுக்கப்படுப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமாக நிறுவனத் தலைவர் என்ற வகையில் தாங்கள் தனிப்பட்ட வகையில் பொறுப்புக் கூறுதல் வேண்டும்.

**viii. இந்த நியமனங்களை வழங்கும்போது ஏற்புடைய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு புறம்பாக நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் அரசியல் அழுத்தங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுதல் தேர்தல் ஆணைக்குழுவினால் பிரசித்தப்படுத்தப்பட்டுள்ள முன்னர் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை மீறுவதாக அமையுமெனவும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியலமைப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ரீதியான பொறுப்புக்களுக்கு உட்பட வேண்டுமெனவும் தெரிவிக்கின்றேன்.**

04. இது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவல் நடைமுறைகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்புடைய ஏற்பாடுகளை பின்பற்றி பக்கச்சார்பற்ற மற்றும் நீதியான முறையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மேலும் தயவுடன் அறிவிக்கின்றேன்.

**மஹிந்த தேசப்பிரிய**
தவிசாளர், தேர்தல்கள் ஆணைக்குழு.
(தேர்தல்கள் ஆணைக்குழு சார்பாக.)

பிரதி :

1. **அரசாங்க சேவை ஆணைக்குழு உட்பட அரசியல் அமைப்பு சபையினால் அங்கத்தவர்கள் பெயர் குறிப்பிடப்படும் நியதிச்சட்ட ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்.**
   - தயவுடன் தகவலுக்காக மற்றும் உரிய அலுவல் மேற்கொள்வதற்காக.

2. **கணக்காய்வாளர் தலைமை அதிபதி**
   - தயவுடன் தகவலுக்காக மற்றும் அனைத்து அரச நிறுவனங்களிலும் இவ்வாறான ஆட்சேர்ப்புக்கள் சம்பந்தமாக கண்டறிவதற்காக.